# கோழியைப் பாடியவாயால் குஞ்சைப் பாடுவேனா?

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை

திருவிளையாடற்புராணம் சிவபெருமானுடைய அறுபத்துநான்கு திருவிளையாடல்களை எடுத்துக்கூறும் நூலாகும். கந்தபுராணம் முருகப்பெருமானுடைய திருவிளையாடல்களைச் சுவைபடக்கூறும் இலக்கியமாகும் இந்நூல்களில் காணப்படாத செவிவழிக்கதைகள் சிலவும் முருகனது லீலைகளைப்பற்றி எடுத்துக்கூறுகின்றன-அவற்றில் ஒன்றுதான் பொய்யாமொழிப் புலவர் சம்பந்தப்பட்ட அற்புதமான கதையாகும்.

''தஞ்சைவாணன்கோவை'' என்னும் அருமருந்தன்ன நூலைப்பாடிய பெருமைக்குரியவர் பொய்யாமொழியார். காளிதேவியின் அருள்பெற்ற பெரும் கவிஞர். காளிதேவியைத்தவிர வேறுதெய்வத்தைப் பாடாத பாவலர். முருகப்பெருமான் ஒரு சமயம் அடியார் வேடம் பூண்டு இவரிடம் சென்று, ''புலவரே! முருகப்பெருமான் மீது ஒருபாட்டுப்பாடும்'' என்று கேட்டார். அதற்குப்புலவர் ஏளனமாக ''கோவைபாடிய வாயால் பாவை பாடுவேனா? கோழியைப் பாடிய வாயால் குஞ்சைப்பாடுவேனா?'' எனக்கேட்டு நகைத்தார். முருகனடியாரும் நாணமுற்றார்போல் நடித்து அவ்விடம் விட்டகன்றார்.

ஒருநாள் தீப்போல் வெயில் கொளுத்தும் மதிய நேரம். பாலை நிலமொன்றினூடாக மதுரையை நோக்கி பொய்யாமொழிப்புலவர் நடந்து கொண்டிருந்தார். வழியில் இடைநடுவே ஒரு வேடன் தோன்றினான். ''அடே! நீயார்? உன் மடியில் இருப்பது யாது? இருப்பதை என்னிடம் கொடுத்துவிட்டு ஓடு. இல்லாது விடில் என் கைக் கூரிய வேலால் குத்தி உன் உயிரைப் போக்கிவிடுவேன்'' என்று கடுமையான தொனியில் பேசினான். புலவர் நடுநடுங்கினார். வாய்குழறினார்.

''ஐயனே! நான் ஒரு புலவன். என் மடியில் பொன்னோ, பொருளோ, விலையுயர்ந்த வேறுபொருளோ இல்லை கையிலிருப்பது கோவைப்பிரபந்தம் மட்டுந்தான்'' என்று புலவர் கூறினார்.

''ஆகா! நீபுலவனா? அதுவும் நல்லதுதான். எங்கே- என் பெயர் முட்டை. என்மீது ஒரு பாட்டுப்பாடு. அதுவும் பாலை நிலத்தினூடாக தலைவனுடன் உடன் போகிய தலைவியை நினைந்து ஆற்றாது நற்றாயொருத்தி கூறுவதாக, அகத்துறைப் பாடலாக அமைய வேண்டும். பாடு!'' என்றான் வேடரூபன். உடனே புலவரும் சுரம் போக்கு என்னும் துறையில் அமைத்து பின்வரும் வெண்பாவைப் பாடினார்.

''பொன் போலும் கள்ளி பொறிபறக்கும் கானலிலே
என்பேதை செல்லற்கி சைந்தனளே — மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாத தெவ்வர்போம்
கானவேல் முட்டைக்கும் காடு.''

இப்பாடலைக் கேட்ட வேடுவன் சிரித்தான். ''மின்னல் போன்ற ஒளிபொருந்திய 'வேல்' ஆயுதத்தையுடைய ''முட்டை'' என்னும் பெயரையுடையவரின் எதிரிகள் (அஞ்சி) செல்லுகின்ற - வேலமுட்கள் காலில் தைக்கின்ற காட்டில் கள்ளிச் செடிகள் வெயிலால் எரிந்து பொன் போன்ற நெருப்புப் பொறிகள் பறக்கும் இத்தகைய பாலை நிலத்தினூடாக என் மகள் தான் விரும்பிய தலைவனுடன் செல்வதற்கு இசைந்து விட்டாளே'' என்னும் பொருள் பட புலவர் பாடிய பாடல் வேடனுக்கு சிரிப்பை உண்டாக்கியது மட்டுமன்றி - ''புலவரே ! உமது பாடலில் பிழையுள்ளது !'' என்று கூறவும் வைத்தது, புலவருக்கு வந்தது கோபம். ''அடே ! வேடுவனே! நீ கையில் வேல் ஆயுதத்துடன் நிற்கிறாய் என்ற துணிச்சலில் எதையும் கூறலாம். என்று நினைக்காதே. என்னுடைய பாடலில் பிழைகாணும் அளவுக்கு உனக்கேதடா அறிவு?'' என்ற ஆணவத்தோடு, ஆத்திரத்தோடு கூறினார். வேடனோ ஆத்திரப்படவில்லை - கோபப்படவில்லை. '' ஐயா! உங்கள் பாடலில் சொற்குற்றம் இருந்தால் பரவாயில்லை, பொருட் குற்ற மன்றோ உள்ளது'' என்றான். ''அப்படியா? சரி. எங்கே அக்குற்றத்தைச் சுட்டிக் காட்டு பார்க்கலாம்'' என்றார் புலவர் மாறாச் சினத்துடன்.

''சாதாரண வெயிலுக்கே எரிந்து போய்விடும் இயல்புடையது வேலம் முள். கள்ளியோ எத்தகைய வெப்பத்தையும் தாங்கும் இயல்புடையது. உமது பாடலின் படி பொன் போலக் கள்ளி எரிகின்ற கானகத்தில் வேலம் முள் எரியாது நின்று தைக்கின்றது! அது எவ்வாறு தைக்கமுடியும்? இப்பொழுது கூறும் உமது பாடலில் பிழையுண்டோ இல்லையோ?'' என்று கேட்டான் வேடுவன். புலவர் அதிர்ந்தார். ஆணவம் அழிந்தது. அமைதியாகச் சொன்னார் - ''ஐயா! வேடுவரே! உமக்கு இவ்வளவு தமிழறிவு உண்டென நான் கற்பனை கூடச் செய்யவில்லை'' என்று வியந்து கூறினார். அதற்கு வேடுவனோ - சிரித்தபடி - ''புலவரே! நீர் கோழியைப் பாடிய வாயால் அதன் குஞ்சைப் பாடுவேனா என்று கூறினீரல்லவா? இப்பொழுது அதன் முட்டையையே பாடி விட்டீரே'' என்றான்.

வேடுவனாக வந்தவர் வேறுயாருமல்ல- கோழியின் குஞ்சு - முருகப்பெருமானே என்பதைப் புலவர் உணர்ந்தார். வேடுவனாக வந்த பெருமானின் காலில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார். முருகனும் தான் கேட்க வேண்டியதை கேட்டு விட்டோமென்ற திருப்தியோடு புன்முறுவல் பூத்தவாறு புலவருக்கருள் பாலித்து மறைந்தருளினார். இப்பாடலில் ''முட்டைக்கு'' என்பது முள் + தைக்கும் என்பது பொருளாகும். குஞ்சைப் பாட மறுத்தவர் முட்டையே பாடினார். பாடவைத்து ஆடல் நிகழ்த்தியவர் முருகப்பெருமான்.

( இதே போன்ற திருவிளையாடல் முருகன் பல இடங்களில் ஆற்றியுள்ளான். ''அப்பனைப் பாடிய வாயால் சாமிசுப்பனைப் பாடுவேனா '' ஒருகவி மறுத்தவிடத்து- பின்னர் சுப்பனையே அந்தக்கவி பாடியதும் உண்டு. ஔவைக்கு நாவல் பழம் கொடுத்து சுட்டபழம் சுடாதபழம் என்று ஔவை வாயால் பாட்டுக்கேட்ட முருகனை - முருகனென்று அறியாது ''கருங்காலிக்கட்டை'' என்று ஔவை கூறியதன்பின் வந்தவரை முருகன் என்பதை உணர்ந்து அவர் கேட்டவற்றுக்கெல்லாம் பாட்டில் விடை பகர்ந்தார் ஔவையார். இப்படி முருகன் திருவிளையாடல்களும் நிறைய உள. )